**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) CC.944/2015
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.9
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | லெட்சுமி | -- | |
| Husband Name | கனகராஜ் | Calling | சத்துணவு அமைப்பாளர் |
| Village | முதுகுடி | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 21st day of April 2025.

**முதல் விசாரணை**

நான் ராஜபாளையம் தாலுகா முதுகுடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சத்துணவு அமைப்பாளராக ராஜபாளையத்தில் வேலை செய்து வருகிறேன். மம்சாபுரம் காந்தி நகரை சேர்ந்த எனது உறவினரான ராமலெட்சுமி என்பவர் குழு அமைத்திருப்பதாகவும் அதில் ஆட்களை சேர்த்து விடவேண்டும் எனவும் என்னிடம் தெரிவித்தார். அதன் பெயரில் நான் ஒரு குழுவிற்கு 10 நபர்கள வீதம் மொத்தம் 3 குழுக்களாக 30 நபர்களை சேர்த்துவிட்டேன். அதற்காக முதல் மாதத்தில் ஒரு நபருக்கு ரூ.1800/– வீதம் 30 நபர்களிடமும் மேற்படி ராமலெட்சுமி பெற்றுக்கொண்டார். லோன் வாங்கி தருவதாக கூறி பணம் வாங்கிச்சென்றார். மேற்படி பணத்தை ராமலெட்சுமி எங்கு கட்டினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. லோன் வாங்கி தரவில்லை. அதன் பின்னர் சிறிது நாட்கள் கழித்து பணத்தை பெற்றுக்கொண்டு யாரோ ஏமாற்றி விட்டதாக மட்டும் என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகு சுமார் 2 மாதத்திற்கு முன்பாக ரூ.10,000 வீதம் செக் போட்டு கொடுத்தார். அவர்களிடமிருந்து மேலும் ரூ.40,000/– வரை வரவேண்டியுள்ளது. மேற்படி குழுவின் பெயரும் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் யாரும் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளின்பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீஸ் விசாரணையில் ராஜபாளையம் தென்காசி ரோடு உர காம்பளக்ஸில் எஸ் எம் எஸ் என்ற கிளை நிர்வாகம் செயல்படுவதாகவும் அதில் ராமலெட்சுமி களப்பணியாளராக

பணிபுரிந்து வருவதாகவும் அந்த நிறுவனத்தில் 10 நபர்களை ஒரு குழுவாக நியமித்து நபருக்கு ரூ.1000/– வீதம் ரூ.10,000/– செலுத்தினால் உடனடியாக தனிநபர் கடனாக ரூ.25,000/– பெற்று தருவதாகவும் கூறியதன் பெயரில் நான் 10 நபர்களை பத்மா மகளிர் குழு என்ற பெயரில் குழுவாக நியமித்து நபருக்கு ரூ.1000/– வீதம் ரூ.10,000/– அவரிடம் கொடுத்து ராஜபாளையத்திலுள்ள கிளை நிறுவனத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டேன் என்றும் அந்த ரசீதில் மேலாளர் குருவாண்டவர் என்பவர் கையெழுத்திட்டு கொடுத்தார் என்றும் அந்த நிறுவனத்தின் துணை மேலாளர் பொன்மணி என்றும் அதில் பாலமுருகன், வீரமுத்து ஆகியோர்கள் பணிபுரிந்து வருவதாகவும் மேற்படி கிளை நிறுவனத்தில் தலைமை அலுவலகம் தஞ்சாவூரில் செயல்படுவதாகவும் மாதவன் என்பவர் மேற்படி நிறுவனத்தில் நிர்வாக இயக்குநராக இருந்துள்ளார் என்றும் வாசுகி என்பவர் இரண்டாவது பங்குதாரராக இருந்து நடத்தி வந்தார் என்றும் இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 21st day of April 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**